# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0056/2017/ந

ஆணை எண்: 167/2017

நாள்: 21/06/2017

திரு. எஸ். செய்யது அலிஹாதி,
74/71, புது தெரு,
நாகப்பட்டினம் - 611 001.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாகப்பட்டினம் நகராட்சி.
நாகப்பட்டினம் மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

**<u>ஆணை</u>**

முறையீட்டு மனுதாரர் திரு. எஸ். செய்யது அலிஹாதி என்பவரது 16.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு 20.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0056/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் நாகப்பட்டினம் கத்தீப் லெப்பை தெரு, வார்டு எண்.1 பிளாக் எண்.16, நகரளவு எண் 1718ல் திரு. ஏ. அப்துல் காதர் என்பவர் நகராட்சியில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி முடித்து பிப்ரவரி' 2016 முதல் குடியிருப்பதாகவும், நகராட்சி ஆணையர் அக்குடும்பத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. நாகப்பட்டினம் நகராட்சியின் கடிதம் ந.க.எண்.3580/2016/எப்.1 நாள்:26.10.2016ல் (திரு. எஸ். செய்யது அலி ஹாஜி என்பவருக்கு முகவரியிட்டது), நீதிமன்ற வழக்கினால் திரு. அப்துல் காதர் என்பவருக்கு கட்டிட அனுமதி ஏதும் நகராட்சியால் வழங்கப்படவில்லை என்றும் அனுமதி பெறாமல் கட்டிட வேலை துவங்கியதால் திரு. எ. அப்துல் காதர் என்பவருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 216(1) & (2)ன் கீழ் அறிவிப்பு வதுங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனு குறித்தான பதிலறிக்கையினை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0056/17 நாள்:21.03.2017 மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், 02.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கும், நகராட்சி ஆணையருக்கும் தனித்தனியே அழைப்பாணை (முறைமன்ற எண்.0056/2017/ந நாள்:24.03.17) அனுப்பப்பட்டது. நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3580/2016/எப்.1 நாள்:10.4.2017, இம்முறைமன்ற நடுவத்திற்கு 28.04.2017 அன்று வரப்பெற்றது. அதில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் திரு. எ. அப்துல் காதர் என்பவர் நகராட்சி அனுமதி பெறாமல் கட்டிட வேலை துவங்கியதால் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 216(1) & (2) மற்றும் 3ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதெனவும், நாகப்பட்டினம் குற்றவியல் நடுவர் நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கையில் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02.05.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள முறையீட்டினை வலியுறுத்தியதுடன் தான் புகார் அனுப்பிய பின்பு ஏறத்தாழ 1 ½ ஆண்டுகள் கடந்த பின்பு 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக நகராட்சியிலிருந்து பதில் வரப்பெற்றதெனவும் அதன் பினனர் 10.04.2017 நாளிட்ட கடிதம் மூலம் அனுமதியின்றி கட்டிய கட்டிடம் தொடர்பாக நாகப்பட்டினம் குற்றவியல் நடுவர் மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கையில் உள்ளதென பதில் வரப்பெற்றதெனவும் நகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து முறையீட்டு மனுதாரரால் வாக்குமூலம் அளிக்கப்பட்டது.

மேலும், மனுதாரர் நகராட்சி ஆணையரிடம் தாக்கல் செய்த கூடுதல் வாதுரையில் தாங்கள் தொடர்ந்துள்ள நீதிமன்ற வழக்கில் இறுதி தீர்ப்பு வரும்வரை, நகராட்சியில் கட்டிட

அனுமதியின்றியும், சட்ட விரோதமாகவும், நீதிமன்றத்தை மதிக்காமலும் அத்துமீறி கட்டப்பட்டு குடியிருந்து வரும் வீட்டை காலியாக வைக்க வேண்டுமென கோரியுள்ளார்....

02.05.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர், திரு. P. ஜான்சன் என்பவர் புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்தில் அனுமதியின்றி கட்டிடம் கட்டுவது குறித்து தெரிய வந்ததும். கட்டுமான பணிகளை நிறுத்துமாறு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 216(1) மற்றும் (2)ன் கீழ் 22.5.15ல் திரு. அப்துல் காதர் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், 12.4.2017ல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும் தெரிவித்தார். ஆனால், வழக்கு எண். ஏதும் தெரிவிக்கவில்லை. 2015க்கு பின்னர் சுமார் இரண்டு ஆண்டுகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து கேட்டபோது அப்போதிருந்த நகரமைப்பு ஆய்வாளர் திரு.தமிழ்செல்வன் என்பவர் (தற்போது கும்பகோணம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர்) இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் நகராட்சி ஆணையரால் திரு. A. அப்துல் காதர் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ள ஆணை ந.க.எண்.1957/2015 நாள்:22.05.2015 பரிசீலிக்கப்பட்டது. மேற்படி ஆணையில் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் புகாரிலுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டுமெனவும் தவறினால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 339 (2)ன் படி நகராட்சி ஊழியர்களால் இடிக்கப்படுவதுடன் அதற்கேற்படும் சகல செலவும் மேற்படி சட்டம், பிரிவு 340 (1), 344-ன்படி வசூலிக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அத்தகைய அறிவிப்புக்குப் பின்னர் 12.04.2017 வரை எந்த ஒரு சட்ட ரீதியான நடவடிக்கையும் நகராட்சியால் எடுக்கப்படவில்லை.

இதற்கு பொறுப்பான நகரமைப்பு ஆய்வாளர் திரு. நா. தமிழ்ச்செல்வன் என்பவரை 13.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகிடத் தெரிவித்து அழைப்பாணை (மு.ம.எண்.0056/17/ந நாள்:05.05.17) அனுப்பப்பட்டது. அதன்படி ஆஜரான நகரமைப்பு ஆய்வாளர் திரு. நா. தமிழ்ச்செல்வன் புகாரில் கூறப்பட்ட அனுமதியற்ற கட்டிடம் குறித்து 22.05.2015ல் அறிவிப்பு வழங்கப்பட்டதெனவும் அதன் பின்னர் 02.04.2016வரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தற்போது 23.09.2016ல் தான் கும்பகோணம் நகராட்சிக்கு பணி மாறுதலில் சென்ற பின்னர் தற்போதைய நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரால் 12.04.2017ல் நாகப்பட்டினம் குற்றவியல்

நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து நடவடிக்கையில் உள்ளதாக வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளார்.

நகராட்சியில் நகரமைப்பு தொடர்பான பணிகளுக்கு பொறுப்பான நகரமைப்பு ஆய்வாளர் அனுமதியற்ற கட்டுமானம் குறித்த புகார் வரப்பெற்ற பின்னரும் ஆண்டுக்கணக்கில் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்துள்ளது கண்டிக்கத்தக்கதாகும். விதி மீறல்களுக்கு சட்டதிட்டங்களுக்குட்பட்டு பணியாற்றும் அரசு பணியாளர்களே உறுதுணையாக இருப்பது அந்த சட்ட விதிகளை அவமதிக்கும் செயலாகும். எனவே, சம்பந்தப்பட்ட அலுவலரது விளக்கங்களைப் பெற்று துறை வாரியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இம்முறைமன்ற நடுவ ஆணையிடுகிறது.

மேலும், அரசாணை நிலை எண்.289, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ4(1) துறை நாள்: 16.10.2016ன் படி, நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் கட்டிட விதிகளுக்கும் புறம்பாக அமைந்துள்ள கட்டுமானங்கள் குறித்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 மற்றும் 57-ன் கீழ் அமலாக்க நடவடிக்கை தொடர நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தக்க துரித நடவடிக்கைகளை சட்ட விதிகளுக்கிணங்க மேற்கொள்ளுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   நாகப்பட்டினம் நகராட்சி,
   நாகப்பட்டினம் மாவட்டம்.
2. திரு.எஸ். செய்யது அலிஹாதி,
   74/71, புது தெரு,
   நாகப்பட்டினம் - 611 001.

நகல்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   தஞ்சாவூர் மண்டலம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.